

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.06.2025) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வருகின்ற 07.07.2025 அன்று திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற உள்ளதை முன்னிட்டு, திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகள், யாகசாலை அமைக்கும் பணிகள், திருக்கோயிலின் மேல்தளத்தின் உறுதித்தன்மை, குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்களுக்கான தேவையான அடிப்படை வசதிகள். பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் எம். அன்புமணி, எஸ்.ஞானசேகரன். திருக்கோயில் தக்கார் ஆர். அருள் முருகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.




சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் (BLA2) 18.6.2025 அண்ணா நகர் சாந்தி காலனியில் அமைந்துள்ள, அகர்வால் சபாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மண்டல தேர்தல் பொறுப்பாளருமான ஆ. ராசா எம்.பி. வரும் 2026ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் புதிய உறுப்பினர்களை கழகத்தில் சேர்ப்பது குறித்து விரிவாக பேசினார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே மோகன், தொகுதி பார்வையாளர்கள் தமிழன் பிரசன்னா, வே.கௌதமன், பகுதி கழகச் செயலாளர் ந.ராமலிங்கம், ச. பரமசிவம், மாநிலத் துணைச் செயலாளர் தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், வட்டக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA2) கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.ஆஜீப்கான் அறிவிப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், தமிழர் நலன் காத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படி தேனி வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 20.06.2025 | போடிநாயக்கனூர் நகரம் | வள்ளுவர் சிலை அருகில் | போடி காமராஜ்<br>இ.முத்துசெல்வம் |
| 2 | | போடி நாயக்கனூர் கிழக்கு ஒன்றியம் | கோடங்கிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் | போடி காமராஜ்<br>இ.முத்துசெல்வம் |
| 3 | | பூதிப்புரம் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | போடி காமராஜ்<br>இ.முத்துசெல்வம் |
| 4 | 21.06.2025 | பழனிசெட்டிபட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் இரா.பாண்டியன்<br>கு.சுருதி |
| 5 | | தேனி வடக்கு ஒன்றியம் | தாடிச்சேரி பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் இரா.பாண்டியன்<br>கு.சுருதி |
| 6 | | வீரபாண்டி பேரூர் | வ.உ.சி. சிலை அருகில் | கம்பம் இரா.பாண்டியன்<br>கு.சுருதி |
| 7 | | தேனி தெற்கு ஒன்றியம் | கோட்டூர் பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் இரா.பாண்டியன்<br>கு.சுருதி |
| 8 | 22.06.2025 | பெரியகுளம் நகரம் | பழைய பேருந்து நிலையம் அருகில் | கம்பம் பி.பாண்டித்துரை<br>கு.சுருதி |
| 9 | | தேனி தெற்கு நகரம் | சமதர்மபுரம் | கம்பம் பி.பாண்டித்துரை<br>கு.சுருதி |
| 10 | | தேனி வடக்கு நகரம் | அல்லிநகரம் பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் பி.பாண்டித்துரை<br>கு.சுருதி |
| 11 | 23.06.2025 | கெங்குவார்பட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | போடி கலைச்செல்வன்<br>கு.சுருதி |
| 12 | | தேவதானப்பட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | போடி கலைச்செல்வன்<br>கு.சுருதி |
| 13 | | வடுகபட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | போடி கலைச்செல்வன்<br>கு.சுருதி |
| 14 | | பெரியகுளம் வடக்கு ஒன்றியம் | அழகர்சாமிபுரம் | போடி கலைச்செல்வன்<br>கு.சுருதி |
| 15 | 24.06.2025 | பெரியகுளம் தெற்கு ஒன்றியம் | ஜெயமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன்<br>கு.சுருதி |
| 16 | | தாமரைகுளம் பேரூர் | வ.உ.சி. சிலை அருகில் | குமரி பிரபாகரன்<br>கு.சுருதி |
| 17 | | தென்கரை பேரூர் | முத்தாலம்மன் கோவில் அருகில் | குமரி பிரபாகரன்<br>கு.சுருதி |
| 18 | 25.06.2025 | மார்கையன் கோட்டை பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன்<br>இ.முத்துச்செல்வம் |
| 19 | | குச்சனூர் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன்<br>இ.முத்துச்செல்வம் |
| 20 | | சின்னமனூர் ஒன்றியம் | எர்ணம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன்<br>இ.முத்துச்செல்வம் |
| 21 | 26.06.2025 | மேலசொக்கநாதபுரம் பேரூர் | வினோபாஜி நகர் பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன்<br>இ.முத்துச்செல்வம் |
| 22 | | போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றியம் | அணைக்கரைப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன்<br>இ.முத்துச்செல்வம் |
| 23 | | போடி–மீனாட்சிபுரம் | துரைராஜபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன்<br>இ.முத்துச்செல்வம் |

தேனி

நாள் : 19-06-2025




### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ்

# கழகத்தினர் வீடு வீடாகச் சென்று 7 லட்சம் உறுப்பினர்களை கழகத்தில் சேர்த்திடுவோம்!

## மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், ஜுன் 20- முதல்வர், கழகத்தலைவர் அவர்களின் அன்பு ஆணையை ஏற்று “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழகத்தினர் அனைவரும் வீடு - வீடாகச் சென்று 7 லட்சம் உறுப்பினர்களை கழகத்தில் சேர்த்திடுவோம் என்று மாவட்டச் செயலாளர்- அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் கத்திப் பாராஜோதிதிரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கழக பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு சிறப்புரையாற்றினார்.

தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ. வைதியலிங்கம், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பத்மப்ரியா, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், பிரபு கஜேந்திரன், பரிதி இளம்சுருதி, எஸ்.எம்.எச்.அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.அரசு, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி. அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், டி.காமராஜ், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தே மாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, சிங்கபெருமாள் கோயில்



கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், கே.எத்திராஜ், எஸ்.சதீஷ், எம்.ஆர்.சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், செ.அருள்தேவி, மு.ரஞ்சன், தேவேந்திரன்,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், தி.க.பாஸ்கரன், உதயா கருணாகரன், சசிகலா, டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

மதுரை, உத்தங்குடியில் கடந்த ஜீன் 1-ஆம் தேதி நடைபெற்ற வரலாற்று சிறப்பு மிக்க பொதுக்குழுக் கூட்டத்தில் நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான, அன்புத்தலைவர், முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காத்திட, “ஓரணியில் தமிழ்நாடு“ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம் எனும் சிறப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

துளியும் சமரசமின்றி நெஞ்சுரத்தோடு தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திடும் பொருட்டு “ஓரணியில் தமிழ்நாடு“ என உறுப்பினர் சேர்க்கையை கழகம் முன்னெடுக்க வேண்டும் என்ற நம்முடைய உயிரனையத் தலைவர் அவர்களின் அன்புக் கட்டளையை நிறைவேற்றிடும் வகையில்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள 2404 வாக்குச் சாவடிகளிலும் மொத்தம் உள்ள 24 லட்சத்து 3 ஆயிரத்து 233 வாக்காளர்களில், ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவிகிதம் வாக்காளர்களை கழகத்தில் உறுப்பினராக இணைத்திட வேண்டும் என்று தலைமைக் கழகம் நிர்ணயித்துள்ள இலக்கை நிறைவேற்றிடும் வகையில்

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் இணைந்து வீடு - வீடாகச் சென்று, 6 தொகுதிகளிலும் மொத்தம் 7 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கழகத்தில் சேர்த்திடும் மிக முக்கியமான பணியை விரைந்து செய்து முடிக்க வேண்டும், இந்தப் பணி ஜீன் 25-ஆம் தேதி மாவட்டம் முழுவதும் தொடங்கப்பட உள்ளது என்றும்,

நம்முடைய மாவட்டத்தில் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் (BLC), வாக்குச்சாவடி இளைஞர் அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் வாக்குச்சாவடி மகளிர் அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆகிய 31 தேர்தல் பணிக் குழு உறுப்பினர்களும், கழகத்தினரும்,

அந்தந்த பாகங்களில் வீடு - வீடாகச் சென்று அரசின் திட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும், மக்களிடம் விரிவாக விளக்கிக் கூறி கழகத்தில் புதிய உறுப்பினர்களை சேர்த்திடும் உன்னதப் பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்றும்.

வருகிற ஜீலை 31-ஆம் தேதிக்குள் காஞ்சி வடக்கு மாவட்டத்தில் அடங்கிய மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு கிளைகழகச் செயலாளர்கள் அனைவரும் கழகத்தினருடன் இணைந்து கழகத்தில் புதிய உறுப்பினர்களை சேர்த்திடும் பணியில் மும்முரமாக - முழு வீச்சில் ஈடுபட்டு,

நம்முடைய நம்பிக்கைத் தலைவர் அவர்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையை ஏற்று கழகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து, ஜீன் 25-ஆம் தேதி முதல் வீடு - வீடாகச் சென்று கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை தொடங்கி, வருகிற ஜீலை 31-ஆம் தேதிக்கு முன்பாகவே நிறைவு செய்து, நம்முடைய கழகத்தை 7-வது முறையாக வெற்றி பெறச் செய்து நம்முடைய ஒப்பற்றத் தலைவர் தளபதி அவர்களை 2-வது முறையாக முதல்வர் அரியணையில் அமர்த்துவதே நம்முடைய இலட்சியம் என்று உறுதி ஏற்று பாடுபடுவோம் என்று, காஞ்சிபும் வடக்கு மாவட்ட தி.மு.கழகம் ஏக மனதாக முடிவெடுக்கிறது.

தமிழ்மொழி - தமிழ்ப் பண்பாடு ஆகியவை காலத்தால் முந்தையவை என்பதை அகழாய்வுகளும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளும் தொடர்ந்து மெய்ப்பித்து வருகின்றன. 5300 ஆண்டுகளுக்கு முன்பே இருப்புத் தாதிலிருந்து இரும்புப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிற வரலாற்று உண்மை இன்றைய நவீன அறிவியல் ஆய்வுகள் மூலமாக நிறுவப்பட்டிருப்பதைத் தமிழ்நாடு அரசு ஆதாரப்பூர்வமாக வெயியிட்டும் கூட. அதற்கு இந்தியப் பிரதமரோ, இந்திய தொல்லியல்துறையோ வாழ்த்துக் கூட தெரிவிக்கவில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடந்த அகழாய்வுகளின் அடிப்படையில் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதற்கான தரவுகள்கிடைக்கப்பெற்று அவை உலகளாவிய ஆய்வு நிலையங்கள் மூலமாகவும் நிறுவப்பட்டிருப்பதைத் தொல்லியல்துறை சார்பில் அதன் அதிகாரியாக இருந்த அமர்நாத் ராமகிருஷ்ணா ஆய்வறிக்கையாகச் சமர்ப்பித்து ஆண்டுகளாகியும் அதனை ஏற்காமல், திருத்தங்கள் தேவை என ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தெரிவித்திருப்பது, தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாட்டின் மீதும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குள்ள வன்மத்தையே காட்டுகிறது என்றும்,

தங்களின் பொய்யான - கற்பனையான சமஸ்கிருதம் - சரஸ்வதி ஆற்று நாகரிகத்தை, தமிழர்களின் வைகை ஆற்று - கீழடி ஆய்வுகள் உண்மைத் தரவுகளுடன் மிஞ்சிவிட்டன என்ற காழ்ப்புணர்விலிருந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளி வந்து, கீழடி ஆய்வறிக்கையை ஏற்று, இந்தியாவின் பெருமைமிகு நாகரிகமாகத் தமிழரின் நாகரிகத்தை அறிவிக்க வேண்டும் என்றும்,

கீழடி தமிழரின் தாய்மடி ! பரந்துபட்ட பார்வையோடு - அறிவியல் பூர்வமாககீழடி அகழாய்வுகள் நிருபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெயியிட மறுக்கும் தமிழர் விரோத ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஆதிக்க - அரசியல் விரோதப் போக்கை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.